**செய்தி வெளியீடு எண்: 047** **நாள்: 20.01.2020**

இன்று (20.1.2020) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை.

---

பசியில்லா தமிழ்நாடு கண்ட பசுமை நாயகி!

காவேரியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வி!

அறிவுப் பசியை போக்கிய கலைமகள்!

பெண்களை பொருளாதாரத்தில் தலைநிமிரச் செய்த திருமகள்!

அம்மா பிறந்ததால் தமிழ்நாடு மகிழ்ந்தது!

அம்மா ஆண்டதால் தமிழ்நாடு வளர்ந்தது!

என்று கூறி, எங்கள் அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான் புகழ் கொண்ட தமிழ்நாடு"**

என மகாகவி பாரதியாராலும்,

**"வள்ளுவனை பெற்றதால்**
**பெற்றதே புகழ் வையகமே"**

என பாவேந்தர் பாரதிதாசன் அவர்களாலும் புகழ்ந்து பாடப்பட்ட, தெய்வப் புலவர் திருவள்ளுவரின் பெருமையை உலகிற்கு பறைசாற்றும் வகையில், தமிழ்நாடு அரசால் கொண்டாடப்படும் "**திருவள்ளுவர் திருநாள்**" மற்றும் **"தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா"** நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**இந்த நிகழ்ச்சிக்கு**
**தலைமை ஏற்றுள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர்**
**திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

**மாண்புமிகு மீன் வளம், பணியாளர் மற்றும்**
**நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர்**
**திரு. டி.ஜெயகுமார் அவர்களே!**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்
திரு. கடம்பூர் ராஜு அவர்களே!

மாண்புமிகு ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர்
திரு. பா.பென்ஜமின் அவர்களே!

நிகழ்ச்சியிலே முன்னிலை வகிக்கும்
மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர்
திரு. க.பாண்டியராஜன் அவர்களே!

மற்றும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்
திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே,
திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களே,
திரு. செல்லூர் கே. ராஜு அவர்களே,
திரு. பி. தங்கமணி அவர்களே,
திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களே,
திரு. கே.பி. அன்பழகன் அவர்களே,
டாக்டர் வி. சரோஜா அவர்களே,
திரு. இரா. காமராஜ் அவர்களே,
திரு. உடுமலை கே. இராதாகிருஷ்ணன் அவர்களே,
டாகடர் சி. விஜயபாஸ்கர் அவர்களே,
திரு. இரா. துரைக்கண்ணு அவர்களே,
திரு. வெல்லமண்டி என். நடராஜன் அவர்களே,
திரு. கே.சி. வீரமணி அவர்களே,
டாக்டர் நிலோபர் கபில் அவர்களே,
திருமதி வி.எம். ராஜலட்சுமி அவர்களே,
திரு. ஜி. பாஸ்கரன் அவர்களே,
திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்களே,
திருமதி எஸ். வளர்மதி அவர்களே,
அரசு தலைமைக் கொறடா திரு. எஸ். ராஜேந்திரன் அவர்களே,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர்
திருமதி பா. வளர்மதி அவர்களே,

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு
சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற
மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
மரியாதைக்குரிய முன்னாள் மக்களவை துணைத் தலைவர்
டாக்டர் மு. தம்பிதுரை அவர்களே,

**முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே,**
**மரியாதைக்குரிய திரைப்பட நடிகர் திரு. பிரபு அவர்களே,**
**மற்றும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற கலையுலக பெருமக்களே,**
**விருதுகளை பெற இருக்கின்ற விருதாளர்களே,**
**வெளிநாட்டிலிருந்து இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று இருக்கின்ற தமிழ் சொந்தங்களே,**

**வரவேற்புரை ஆற்றிய**
**தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர்**
**திரு. க.சண்முகம் அவர்களே!**

**நன்றியுரை ஆற்றவுள்ள**
**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசுச் செயலாளர்**
**திரு. மகேசன் காசிராஜன் அவர்களே!**

**பெரியோர்களே! தாய்மார்களே!**

**பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!**

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிஞர் பெருமக்கள் ஆற்றிய அரும் பணிகளுக்காக இன்று விருதுகள் பெறுகிறார்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துகளையும், மனமார்ந்த பாராட்டுகளையும் இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உயிரினங்களில் மொழி பேசும் வாய்ப்பு பெற்றது மனிதகுலம் மட்டும் தான். ஒவ்வொருவரது உள்ளத்திலும் ஊற்றெடுக்கும் எண்ணங்களை பிறரிடம் வெளிப்படுத்தி மொழிவதால் '**மொழி**' என்னும் பெயர் வழங்கப் பெற்றது. உலகெங்கிலும் பரவியுள்ள மனிதகுலம், சுமார் ஏழாயிரம் மொழிகள் பேசுவதாக, மொழி ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இவற்றில் எழுத்து வடிவம் பெற்ற மொழிகள் குறைந்த அளவிலேயே உள்ளன.

> **"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**
> **இனிதாவது எங்கும் காணோம்"**

என்றார் மகாகவி பாரதியார் அவர்கள்.

**“தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”**

என்றார் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

குமரி கண்டத்து நெடுவரலாறும், தொன்மையும், உலகின் மூத்த மொழியாகத் தமிழ் மொழியை ஆணித்தரமாக நிலைநிறுத்துகின்றன. இதனையே மொழி ஞாயிறு தேவநேயப் பாவணர் எழுதிய ‘‘**ஞாலம் முதல் மாந்தன் கொள்கை**’ என்ற வரலாற்று இயல் ஆய்வுக் கட்டுரை வலியுறுத்துகிறது. கிரேக்கம், ஹீப்ரு, இலத்தீன் உள்ளிட்ட மொழிகள் பழமையானது என்றாலும், நிலையான புகழும், எப்பொழுது தோன்றியது என்று கணிக்க முடியாத அளவிற்கு தொன்மையான மூத்த மொழியாகவும் விளங்குவது, நமது தாய்த்திரு மொழியான தமிழ் மொழி தான்.

‘‘**இவள் என்று பிறந்தவள் என்று உணராத**
**இயல்பினளாம் எங்கள் தாய்**”

என்று மகாகவி பாரதியார் தமிழ் மொழியின் தொன்மையை புகழ்ந்து பாடுகிறார்.

“**தொன்மை, முன்மை, எளிமை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை**’’ என **16** பண்புகளைக் கொண்ட மொழி நமது தமிழ் மொழியாகும் என்றார் தேவநேயப் பாவாணர் அவர்கள்.

தமிழ் மொழிக்கு எழுத்து, சொல், யாப்பு, அணி, பொருள் இலக்கணம் ஆகியன உண்டு. ஆகையால் தான் தமிழை ஐந்திலக்கணம் என்றனர். தமிழ் எழுத்துக்களின் ஒலிகள் மிக இயற்கையாகவும், எளிமையாகவும் அமைந்திருப்பதால் எவ்வித இடர்பாடுமின்றி வார்த்தைகளை ஒலிக்க இயலும். வேற்று மொழியில் இல்லாத அளவுக்கு தொல்காப்பியம் தொடங்கி பன்னூறு இலக்கிய இலக்கண நூல்கள் தமிழுக்கு வளம் சேர்க்கின்றன.

உலகிலுள்ள தொன்மையான மொழிகளில் ஏட்டளவிலும், பேச்சளவிலும் இன்றைக்கும் நிலைத்து வாழும் மொழி தமிழ் மொழி.

இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் மொழியின் தலை சிறந்த நூலான திருக்குறளை உலகுக்கு அருளியவர் தெய்வப் புலவர் என்று அனைவராலும் அழைக்கப்படும் திருவள்ளுவர். இன்று உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் திருக்குறளும் ஒன்று என்று சொன்னால் அது மிகையாகாது.

திருக்குறளில் வரும் பாடல்கள் அனைத்தும் "**குறள் வெண்பா**" வகையைச் சேர்ந்தவை. அக்காலத்தில் இவ்வகை வெண்பாக்களால் ஆன நூலும் இதுதான். குறள் வெண்பாக்களால் ஆனதால் '**குறள்**' என்றும், அதன் உயர்வு கருதி "**திரு**" என்ற அடை மொழியையும் சேர்த்து, "**திருக்குறள்**" என்று பெயர் பெற்றது.

வாழ்வின் பயனை மக்கள் அடைவதற்கு வழிகாட்டிகளாக உலகின் பல்வேறு மொழிகளில் பல நூல்கள் உள்ளன. அவற்றில் மூன்று நூல்கள், அதை இயற்றியவர்களின் அறிவுத் திறத்தையும், ஆராய்ச்சி நுணுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. முதலாவது, கௌதம புத்தருடைய நல்லுரைகளான '**திரிபீடங்கள்**'. இரண்டாவது, புத்தருடைய காலத்துக்கு ஏறக்குறைய ஒத்த காலத்தில் சீனாவில் வாழ்ந்த கன்பூசியஸின் '**அனலெக்ட்ஸ்**' என்னும் அறிவுரை நூல். மூன்றாவதாக, தமிழ்நாட்டில் வாழ்ந்த திருவள்ளுவரின் '**திருக்குறள்**' ஆகும்.

'**அறம், பொருள், இன்பம்**' என்னும் முப்பொருளின் உண்மையை உலகுக்கு உணர்த்தும் ஒரு பொதுமறையாகவே திருக்குறள் போற்றப்படுகிறது. ஆறறிவு படைத்த மனிதன் வாழ வேண்டிய வாழ்க்கை நெறிகளை மிக அழகாக திருவள்ளுவர் இதில் வறையறை செய்துள்ளார். அவரவர் வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ற வகையில், இந்நூலில் அறநெறிகளை வகுத்துக் கூறியுள்ளார். உதாரணத்திற்கு, அறத்தை உணரத் தலைப்பட்டவர்களுக்கு இது ஒரு அறநூலாகவும், அறிவுத் திறனை வளர்க்க விரும்புவோர்க்கு ஒரு ஞான நூலாகவும், கவிச் சுவையை விரும்புவோர்க்கு ஒரு காவியமாகவும், வாழ்க்கை நெறியை விரும்புவோர்க்கு வாழ்க்கை வழிகாட்டி நூலாகவும் திகழ்கிறது.

ஈரடிகளில் உலகத் தத்துவங்களை சொன்னதால் இது '**ஈரடி**'' நூல் என்றும், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டதால், இது "**முப்பால்**'' என்றும் அழைக்கப்படுகிறது. உத்தரவேதம், பொய்யாமொழி, வாயுரை வாழ்த்து, தெய்வ நூல், பொது மறை, தமிழ் மறை, ஈரடி நூல், வான் மறை என்ற பல பெயர்களால் திருக்குறள் போற்றப்படுகிறது.

உலக மக்கள் அனைவருக்கும், எந்த காலத்திற்கும், பொருந்தும் வகையில் திருக்குறன் அமைந்துள்ளதால், இது உலகப் பொதுமறை என அழைக்கப்படுகிறது.

உலகப் பொதுமறையான திருக்குறள் மற்றும் அதனை உலகுக்கு அருளிய திருவள்ளுவரின் பெருமையை உலகறியச் செய்யவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும், மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- திருவள்ளுவரின் பெருமையினை உலகறியச் செய்யும் வகையில், ஆண்டுதோறும் தைத்திங்கள் **2**ஆம் நாளை திருவள்ளுவர் தினமாக தமிழ்நாடு அரசு சிறப்பாக கொண்டாடி வருகிறது. அந்நாளில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், திருவுருவப் படத்திற்கு மலர் தூவியும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.
- தமிழுக்கு பெருமை சேர்த்திடும் வகையில், தம் வாழ்நாளில் தமிழ்ப் பணியாற்றி வருவதையே உயிர் மூச்சாகக் கொண்டுள்ள தமிழ் அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.
- திருவள்ளுவர் பெயரில் திருவள்ளுவர் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.
- திருக்குறளை கற்றுத் தெளிவதை விட, காட்சியில் கண்டால் எளிதில் மனதில் பதியும் என்பதால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி அரசு நிதி உதவியில் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் சென்னை, தரமணியில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன

வளாகத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. இதனை நாள்தோறும் மாணாக்கர்கள் மற்றும் வெளிநாட்டினர் கண்டு பயனடைந்து வருகின்றனர்.

- திருவள்ளுவர் கால எழுத்தில் மீண்டும் திருக்குறளைப் பார்த்தல் வேண்டும் என்ற அவாவை நிறைவேற்ற, திருக்குறளை வள்ளுவர் வாழ்ந்த கால வரிவடிவில் எழுதிட, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன் முயற்சியின் விளைவாக “**திருவள்ளுவர் கால எழுத்தில் திருக்குறள்**” என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் தமிழின் தொன்மையான வரிவடிவான தமிழியில் (தமிழ்–பிராமி) எழுதப்பட்டுள்ளது என்பதை உலக மக்கள் அறிந்திடச் செய்தல் மட்டுமின்றி, காலத் தொன்மையையும் உலகிற்கு உணர்த்திட வழி செய்யும் இந்த நூல் 11.12.2018 அன்று என்னால் வெளியிடப்பட்டது.
- தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர், தமிழ் மூதாட்டி ஔவையார், கவிச்சக்கரவர்த்தி கம்பர், இளங்கோ அடிகளார், தமிழ் அறிஞர் ராபர்ட் கால்டுவெல், தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலை அடிகளார் மற்றும் தமிழ்த் தென்றல் திரு.வி.கல்யாணசுந்தரனார் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் மாலை அணிவித்தும், அவர்தம் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும், அவர்தம் தமிழ்த் தொண்டினையும், படைப்பாற்றல்களையும் மனதில் தாங்கி வணக்கம் செலுத்தும் அற்புத நிகழ்வு தொடர்ந்து அரசால் நடத்தப்பட்டு வருகிறது.
- பேறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையும் நடத்தி தமிழுக்கு பெருமை சேர்த்தார்கள்.
- தஞ்சாவூரில் தமிழ் பல்கலைக்கழகம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் 1981 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

- தமிழ் மொழியின் வளம் பற்றி உலக மக்கள் அறிவதற்கு ஏதுவாக, திருக்குறள் தவிர மீதமுள்ள பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை உலக மொழிகளான பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளிலும், இந்திய மொழிகளான இந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, 19.12.2019 அன்று என்னால் வெளியிடப்பட்டுள்ளது.
- தமிழ் மொழிக்கு பெருமை சேர்த்த தொல்காப்பியரின் சிலை 10.3.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- தமிழ் மொழிக்கு பெருமை சேர்ப்பது அதன் சொல் வளமே ஆகும். தமிழ் மொழியின் சொல் வளத்தை காப்பது, சொல் வளத்தை பெருக்குவது, பிற மொழிக் கலப்பை தவிர்க்க துணை நிற்பது போன்ற நோக்கங்களின் அடிப்படையில் '**சொற்குவை**' என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என்று என்னால் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழில் உள்ள அனைத்துச் சொற்களையும் ஒரே தளத்தில் நிரல்படுத்தி வழங்குவதற்காக பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர்களின் ஆலோசனைகளைப் பெற்று சொற்குவை திட்டம் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க தமிழ்நாடு அரசின் சார்பில் 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- அமெரிக்க நாட்டின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக 1 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- மேலும், பல்வேறு பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- கழக ஆட்சிப் பொறுப்பேற்கும் போதெல்லாம், தமிழ் அறிஞர்களை பெருமைப்படுத்தும் விதமாக, அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விருதுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி வந்துள்ளது. அந்த

வகையில், தமிழ் வளர்ச்சித் துறையில், 5ஆக இருந்த விருதாளர்களின் எண்ணிக்கை, தற்போது 72 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இது போன்று எண்ணற்ற சாதனைகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று விருதுகள் பெற்ற தமிழ் அறிஞர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பல தமிழ் அறிஞர்கள் தொடர்ந்து தமிழ்ப் பணியாற்றி அவர்களும் விருதுகள் பெற வேண்டும் என வாழ்த்துகிறேன். இதைக் கூறும் போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

சோலையூர் என்ற ஒரு ஊரில் மழை பெய்யாமல், மக்கள் பசியாலும், பட்டினியாலும் வாடி வந்தார்கள். அந்த நிலையில், ஊர் பெரியவர்கள் ஒன்று கூடி, அந்த ஊரில் உள்ள ஒரு செல்வந்தரிடம் வந்தார்கள். அவரிடம், "நம் ஊர் பசி, பஞ்சத்தில் சிக்கித் தவிப்பது தங்களுக்குத் தெரியும். பெரியவர்கள் பசியை பொறுத்துக் கொள்வார்கள். ஆனால், சிறுவர்கள் என்ன செய்வார்கள், பாவம் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்'' என்று கூறினார்கள். அதற்கு, அந்த செல்வந்தர், "கண்டிப்பாக உதவி செய்கிறேன். நம் ஊரில் எத்தனை சிறுவர், சிறுமியர் உள்ளனர்'' எனக் கேட்டார். அப்போது ஊர் பெரியவர் ஒருவர், "40 சிறுவர், சிறுமியர் உள்ளனர்'' என்றார்.

உடனே செல்வந்தர், "அவர்களை நாள்தோறும் காலையில் என் வீட்டிற்கு வரச் சொல்லுங்கள், ஒரு கூடையில் 40 ரொட்டிகளை வைக்கச் சொல்கிறேன். அவர்கள் ஆளுக்கு ஒன்று எடுத்து பசி ஆறட்டும்'' என்றார். அவ்வாறே தினமும் சிறுவர்கள் வந்து ஆளுக்கு ஒரு ரொட்டி எடுத்து தங்கள் பசியை போக்கிக் கொண்டனர். அவ்வாறு ரொட்டி எடுக்கும் போது பெரிய ரொட்டித் துண்டை எடுக்க அவர்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டனர். ஆனால் ஒரு சிறுமி

மட்டும் ஒதுங்கி இருந்து, அனைவரும் எடுத்துக் கொண்ட பின் தனக்கான ரொட்டியை எடுத்துச் சென்றாள்.

சில நாட்கள் கழித்து, அதே போன்று ஒரு நாள் தனக்குக் கிடைத்த சிறிய ரொட்டியுடன் அச்சிறுமி தன் வீட்டிற்குச் சென்றாள். ரொட்டியை பிய்த்துப் பார்த்தபோது, அதற்குள்ளே ஒரு தங்கக் காசு இருந்தது. உடனே அச்சிறுமியின் தாயார், "இது செல்வந்தர் வீட்டு தங்கக் காசு, தவறுதலாக ரொட்டிக்குள் வந்துவிட்டது. அதனை அந்த செல்வந்தரிடமே திருப்பிக் கொடுத்து விடு'' என்று கூறி அச்சிறுமியை செல்வந்தரிடம் அனுப்பினார். அவ்வாறே அச்சிறுமி தங்கச் காசை எடுத்துக் கொண்டு அந்த செல்வந்தரிடம் நடந்ததைக் கூறி திருப்பிக் கொடுத்தாள். அதற்கு செல்வந்தர், "சிறுமியே உன் பொறுமைக்கு நான் கொடுத்த பரிசு இது, இதை நீயே வைத்துக் கொள்'' என்று கூறி, அந்த தங்கக் காசை சிறுமியிடமே திருப்பிக் கொடுத்தார். சிறுமியும் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்து தன் வீட்டிற்குச் சென்றாள்.

இது போன்று வளர்ந்து வரும் தமிழ் அறிஞர்களும் பொறுமையுடன் காத்திருந்து, தங்களது திறமையை நிரூபித்தால், அந்த சிறுமியைப் போல் உரிய நேரத்தில் உங்களுக்கும் விருது கிடைக்கும் என வாழ்த்தி,

இந்த நிகழ்ச்சியினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

> ''**இறைவன் மனிதனுக்கு சொன்னது கீதை**
> **மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்**
> **மனிதன் மனிதனுக்கு சொன்னது திருக்குறள்**''

எனக்கூறி விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**